padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

23

1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவது என்ற கேலி நாடகத்தை பிரித்தானிய காலனிய அரசு அரங்கேற்றியது. பிரித்தானிய ஆளும் வர்க்கம், இலங்கை ஆளும் வர்க்கத்துடன் செய்து கொண்ட இந்த ஆட்சி மாற்றத்தை கத்தியின்றி இரத்தமின்றி போராட்டமின்றி இழப்புகளின்றி இலங்கை மக்களுக்கு கிடைத்த 'சுதந்திரம்' என்று பௌத்த சிங்களக் கனவான்களுக்கு, இணையாக தமிழ் கனவான்களும் சொல்லிச் சொல்லிப் பூரிப்பெய்தினர்.

1833-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களது சம்மதத்தைப் பெறாமலே, தமிழீழ தேசத்தையும், தமிழீழ மக்களது இறைமையையும் தன்னிச்சையாக 'சிலோன்' என்ற ஒற்றையாட்சிச் சிறைக்



குள் அடைத்து அதன் காவலனாக இருந்து செயற்பட்டு வந்த பிரித்தானிய அரசு, 1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதி அந்தக் காவற்பொறுப்பை, தமிழினத்தை அழித்து தமிழீழ தேசத்தை இல்லாதொழிப்பதையே தமது குறிக்கோளாகக் கொண்ட, பௌத்த சிங்கள இனவாதிகளிடம் கையளித்த போது, அந்தக் கால கட்டத்தில் ஈழத் தமிழ் மக்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்ட சி. சுந்தரலிங்கம், சி.சிற்றம்பலம், ஜீ.ஜீ. பொன்னம்பலம் எஸ். ஜே.வி. செல்வநாயகம், வி. நல்லையா, ஏ.எல் தம்பையா, திருச்செல்வம் போன்றோர் அதை மௌனமாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, அந்தக் கையளிப்பு விழாவிலே அதாவது 'சுதந்திர தின' விழாவிலே கலந்து கொள்வதையும் பெருமைக்குரிய விடயமாகவும் கருதினார்கள்.

பிரித்தானிய எசமானர்களுக்கு மிகவும் விசுவாசமான முறையில் நடந்து கொண்டு இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை தனது கைகளுக்குள் எடுத்துக்கொண்டு, அதாவது சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் என்ற பெருமையோடு பதவிக்கு வந்த டி.எஸ். சேனநாயக்கா தன்னை சிங்கள மக்கள் முழுமையாக ஆதரிக்கவில்லை என்பதை உணர்ந்திருந்தார்.

1947ல் நடந்து முடிந்த தேர்தலில் தனக்கு ஏற்பட்ட- அதாவது ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஏற்பட்ட சரிவை எப்படி நிமிர்த்துவது என்பது பற்றி அவர் அதிகம் சிந்தித்தார்.

பாராளுமன்றத்தில் ஐ.தே. கட்சி தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய அளவுக்கு பெரும்பான்மை பெற முடியாமல் போனதற்கு, இடதுசாரிகளின் வளர்ச்சியும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருந்ததுமே காரணம் என்று டி.எஸ் சேன

# மலையக மக்களின் வாக்குரிமை பறித்த கதை

நாயக்கா நம்பினார்.

1947-ம் ஆண்டு தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரசுக்கு 7 இடங்களும், இடது சாரிக் கட்சிகளுக்கு 18 இடங்களும் கிடைத்ததற்கு மலையக மக்கள் மற்றும் நகர்ப்புற இந்தியத் தொழிலாளர்களின் வாக்குகளே காரணமாகும் என்று நினைத்த டி. எஸ் சேனநாயக்கா, சுதந்திர இலங்கையைக் கட்டி எழுப்பும் தனது திட்டத்தின் முதற் கட்டமாக மலையக தமிழ் மக்களின் குடியுரிமை மற்றும் வாக்குரிமைகளை பறிப்பதற்காக 3 சட்டங்களை கொண்டுவந்தார்.

1. குடியுரிமைச் சட்டம்
2. இந்திய பாகிஸ்தானியர்கள் குடியுரிமைச் சட்டம்
3. தேர்தல் திருத்தச் சட்டம்.

முதலாவது குடியுரிமைச் சட்டம் 1948-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்டது.

இச் சட்டத்தில் இலங்கையில் பரம்பரையாக வசித்த ஒருவர், அல்லது தந்தை வழியில் மூன்று தலைமுறைக்கு இலங்கையில் தொடர்ச்சியாக வாழ்ந்த ஒருவர் இலங்கைக் குடியுரிமை பெறத் தகுதியுடையவர் எனக் கூறப்பட்டது.

உண்மையில் 1895-ம் ஆண்டு தான் இலங்கையில் பிறப்பை பதிவு செய்யும் முறை கட்டாயமாக்கப்பட்டது. அதற்கு முன் பெரும்பாலான மக்கள் சட்ட ரீதியாக தமது பிறப்பை பதிவு செய்திருக்கவில்லை. இந்த நிலையில் 'முனசிங்காவும்' 'சோமாவதி'யும் (அதாவது சிங்கள மக்கள்) அவர்களது பெயரையும் மொழியையும் கொண்டே எந்த வித கெடுபிடிகளுமின்றி இலங்கைப் பிரசைகள் ஆக்கப்பட்டனர். ஆனால் தமிழர்களான கந்தசாமியும், மல்லிகாவும், இஸ்லாமியர்களான அபூபக்கரும், பாத்திமாவும் 'கள்ளத் தோணிகள்' என்று சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்பட்டனர். குறிப்பாக மலையக மக்கள் அறியாமையிலும் வறுமையிலும், அடிமைத்தனத்திலும் காலாகாலமாக சிக்குண்டு போயிருந்ததால் அவர்களிடம் அவர்களது பிறப்பை, அவர்களது தந்தைமார் பாட்டன்மார்களது பிறப்பை நிரூபிப்பதற்கான சான்றுகள் எதையும் வைத்திருக்கவில்லை. இந்த விடயத்தை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டுதான் டி. எஸ். சேனநாயக்க இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருந்தார்.

1948-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி இந்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் 'இது எளிமையான சட்டமாக இருந்தாலும் மிக முக்கியமான சட்டமாகும். எவரது நலன்களுக்கும் நாம் தீங்கு விளைவிக்கவில்லை. வேறு ஒரு நாட்டின் பிரசைகள் அல்லாத இலங்கை மக்களுக்கு குடியுரிமை வழங்க நாங்கள் முயற்சிக்கிறோம்... நாம் எமது சொந்தக் குடியுரிமைச் சட்டங்களை வைத்திருப்பது அவசியமானதாகும்' (ஹன்சாட் 19.08.1948) என்று கூறினார்.

இச் சட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் தனது எதிர்ப்பைத் தெரிவித்த இடது சாரித் தலைவர்களில் ஒருவரான பீட்டர் கெனமன், 'இதில் கோரப்படும் சான்றுகளின் அடிப்படையில் பார்க்கப்போனால் மதிப்பிற்குரிய பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா கூட இலங்கைப் பிரசையாக முடியாது. ஏனெனில் அவரது தந்தை இலங்கையில் பிறந்ததற்கான சான்றை அவரால் கூட சமர்ப்பிக்க முடியாது' என்று கூறினார்.

இலங்கை இந்திய காங்கிரஸ் உறுப்பினர்களும் கூட இந்த சட்டத்தை பலமாக எதிர்த்தனர். வடக்கு-கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் கனவான்கள் இதை ஒரு பிரச்சினைக்குரிய பெரிய விடயமாகவே கருதவில்லை.

பாராளுமன்றத்தில் இது வாக்களிப்புக்கு விடப்பட்டபோது அதற்கு ஆதரவாக 53 வாக்குகளும், எதிராக 35 வாக்குகளும் கிடைத்தன. இந்த வாக்கெடுப்பில் டி.எஸ் சேனநாயக்கா அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த சி. சுந்தரலிங்கம், சி. சிற்றம்பலம் ஆகியோர் இச் சட்டத்துக்கு அதரவாக வாக்களித்தனர். ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரசும், இடதுசாரிக் கட்சிகளும் , இலங்கை இந்திய காங்கிரசும் எதிராக வாக்களித்தன.

1947-ல் டி.எஸ்.சேனநாயக்கா ஆட்சி அமைக்க முற்பட்டபோது தமிழ் காங்கிரஸ் தலைவராக இருந்த ஜீஜீ பொன்னம்பலத்தை தனது அரசாங்கத்தில் சேர்ப்பதற்கு பெரிதும் முயன்றார். ஆனால் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தனது எதிராளியான சி. சுந்தரலிங்கத்துக்கு மந்திரிப் பதவி வழங்கியது முதலான சில தனிப்பட்ட காரணங்களால் அதற்கு சம்மதிக்கவில்லை. அதனால் டி.எஸ் சேனநாயக்கா கொண்டு வந்த இந்த முதலாவது சட்டத்தை அவர் எதிர்த்து வாக்களித்தார்.

இரண்டாவது சட்டம் 1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் கொண்டு வரப்பட்டது. முதலாவது சட்டம் தொடர்பாக ஏற்பட்ட எதிர்ப்புகள் கண்டனங்களை திசை திருப்புவதற்காக இந்த இரண்டாவது சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தின் படி 1936-ம் ஆண்டிற்கு முன்பிருந்து இலங்கையில் தொடர்ச்சியாக வாழ்ந்து வரும் இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், அவர்களது தொழில் வருமானம் ஆகிய வரையறுக்கப்பட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இலங்கைக் குடியுரிமை பெறமுடியும் எனச் சொல்லப்பட்டது. ஆனால் இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த கடுமையான விதிமுறைகள் முதலாவது சட்டத்திலிருந்து குறைந்த பட்ச சலுகைகளைக்கூட இல்லாதொழித்து, மலையகத் தோட்டத் தொழிலாளர் குடியுரிமை பெறுவதை எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்க முடியுமோ அந்தளவுக்கு குறைக்கும் வண்ணம் அமைந்திருக்கிறது.

இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு விடப்பட்டபோது 'இந்த நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் ஒரு பகுதியினரின் குடியுரிமை மறுப்பதற்கு கொண்டு வரப்பட்ட வெட்கக்கேடான சட்டம் என்று இடது சாரித்தலைவரான என். எம். பெரேரா கூறினார்'.



இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரான ஹரி அபேகுணவர்த்தனா 'இந்தியர் என்று சொல்லப்படும், தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் இச் சட்டம் எதிரானதல்ல; முழு இலங்கைத் தொழிலாளர்களுக்கும் எதிரானதாகும். தொழிலாளர்களைப் பிரிப்பதற்கும், அவர்களது உரிமைகளை மறுப்பதற்கும், அரசாங்கம் தன்னை அதிகாரத்தில் நிலைநிறுத்தி கொள்வதற்கும் எடுத்த இன்னோர் நடவடிக்கை' என்று கூறினார்.

பிற்காலத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து தன்னை ஒரு பௌத்த சிங்கள இனவாதியாக முத்திரை குத்திக்கொண்ட S.W.R.D. பண்டார நாயக்கா கூட 'எந்த வேலையுமற்ற சிங்களவர் ஒருவர் (இலங்கை) பிரசா உரிமை



பெறத் தகுதியுடையவரானால் வருமானம் எதுவுமற்ற ஓர் இந்தியருக்கு ஏன் இந்த உரிமை விலக்கப்பட வேண்டும்? இந்த அளவு கோல் மிக மோசமான வகுப்புவாதச் சார்புடையதல்லவா? வகுப்புவாதச் சார்பு கீழிருந்து வருவதில்லை. எப்போதும் மேலிருந்தே வருகிறது.' (ஹன்சாட் 10.12.1948) என்று இதைக் கண்டித்துப் பேசினார்.

இந்தச் சட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, அரசாங்கத்தில் மந்திரியாக இருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம், மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்த கே. கனகரத்தினம், ரி. ராமலிங்கம் மற்றும் சுயேட்சை உறுப்பினர்களான யூ.எதிர்மன்ன சிங்கம், வி. நல்லையா, ஏ.எல்.தம்பையா ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அதற்கு எதிராக வாக்களித்திருந்தார். முதலாவது சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதை ஆதரித்து வாக்களித்திருந்த சி. சுந்தரலிங்கம் டி. எஸ். சேனநாயக்காவின் நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொண்டு அரசாங்கத்திலிருந்து விலகியிருந்தார். இச் சட்டத்துக்கு ஆதரவாக 52 வாக்குகளும், எதிராக 32 வாக்குகளும் கிடைத்தன.

அதன் பின் மூன்றாவது சட்டமான தேர்தல் திருத்தச் சட்டம், குடியுரிமை இல்லாதவர்களுக்கு வாக்குரிமை இல்லை என்று கூறியது. இதன் மூலம் மலையகத் தமிழர்களின் வாக்குரிமையும், அரசியல் உரிமையையும் பறித்து- அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய 7 தேர்தல் தொகுதிகளுக்கும் அவர்களால் இடதுசாரிகள் வெற்றிபெறச் சாத்தியக்கூறுகள் இருந்த 14 தொகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் 21 தொகுதிகளுக்கு 'பௌத்த சிங்கள இனவாதம் பேசுபவர்கள் மட்டுமே பிரதிநிதிகளாக வரலாம்' என்ற நடைமுறையை டி.எஸ். சேனநாயக்கா தோற்றுவித்தார்.

- நக்கீரன்

படிப்பகம்